**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S. No.200 of 2022

Deposition of PW.1

Name of the Witness: திருமதி.கௌரம்மாள்

Date : 25.02.2026

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (பிரதிவாதி தரப்பில்)**

6) நான் இதுவரை உயர் நீதிமன்றத்தில் போடப்பட்ட வழக்கில் நான் ஆஜராகவில்லை. அந்த உயர் நீதிமன்ற வழக்கின் தீர்ப்பிற்கு நான் கட்டுப்படுகிறேன். ஏற்கனவே போட்ட இரண்டு வழக்குகளும் தள்ளுபடியாகிவிட்டது என்பதால் இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை பற்றி இந்த வழக்கில் நான் சொல்லவில்லை. நான் ஏற்கனவே தாக்கல் செய்த வழக்குகள் என்ன காரணத்திற்காக தள்ளுபடியாகிவிட்டது என்று எனக்கு தெரியாது. பிரதிவாதி தாக்கல் செய்த பதிலுரை விவரங்களை எனக்கு வழக்கறிஞர் சொன்னார். பாலக்கோட்டில் தாக்கல் செய்த வழக்கு என்ன காரணத்திற்காக தள்ளுபடி செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. என் வழக்கறிஞர்தான் தேவேந்திரன் பெயரில் உள்ள பத்திரத்தை வா.சா.ஆ.1 கிரய பத்திரத்தை வாங்கி கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் 18.10.2010ன் பாகப்பிரிவினை பத்திரத்தின் நகல் எனக்கு எப்போது கிடைத்தது என்றால் என் வழக்கறிஞர்தான் வாங்கி கொடுத்தார். 09.11.2017லேயே இந்த ஆவணம் நான் வாங்கிவிட்டதால் அந்த ஆவணம்

குறித்து நான் கேட்டுள்ள விளம்புகை பரிகாரம் கால தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 3ம் பிரதிவாதி தாக்கல் செய்த பதிலுரையில் AS.11/2019 வழக்கு நிலுவையில் இருந்தபோது OS.118/2017 வழக்கு போடுவதற்கு முன்பாக ஏற்படுத்தப்பட்ட கிரய பத்திரம் தேதி 18.10.2010, கிரய ஒப்பந்த பத்திரம் தேதி 28.09.2011, கிரய ஒப்பந்த பத்திரம் தேதி 05.09.2014, கிரய ஆவணம் தேதி 09.03.2020, கிரய ஆவணம் 01.07.2022 ஆகியவை வாதிகள் மற்றும் 1,2 பிரதிவாதிகளும் கூட்டாக ஏற்படுத்திய ஆவணங்கள் பற்றி குறிப்பிடாததாலும் அந்த ஆவணங்களின் தரப்பினர்களை இந்த வழக்கில் சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் வில்லங்க சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

7) இந்த வழக்கு கால தோஷத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டது)**

**Sd/Tmt.U.Monica, M.L.,**
**Additional District Judge,**
**Dharmapuri.**